அனுப்புநர்
திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப.,
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

பெறுநர்
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்,
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.

ந.க.எண்.15510/2018/டிபி3 நாள்:03.08.2021.

ஐயா,

பொருள்: அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல் திட்டம் – மனைவரன்முறைப்படுத்த தெரிவிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள தனிமனைகளை கண்டறிந்து அவற்றை முறைப்படுத்த சட்ட ரீதியான நடவடிக்கைகளை துரிதப்படுத்த கோருதல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017.
2) அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.05.02.2019.
3) கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் துறை ரீதியான ஆய்வு.

*****

அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017–ம் படியும், விதிகளின்படியும் இதுவரை 1,15,709 எண்ணிக்கையிலான தனிமனைகள் 14,989 எண்ணிக்கையிலான மனைப்பிரிவுகளிலிருந்து முறைப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் 3,58,053 எண்ணிக்கையிலான தனிமனைகள் முறைப்படுத்தப்படாமல் உள்ளதாக மாநகராட்சி / நகராட்சி ஆணையர்களால் சமர்ப்பிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. 2019–ம் ஆண்டு நகர்ப்புற வளர்ச்சித் துறையால் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.21, நாள்.05.02.2019–ன் படி நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்பளிக்கப்பட்ட மனைப்பரிவுகளில் உள்ள தனிமனைகளை எப்போது வேண்டுமானாலும் முறைப்படுத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அனுமதியற்ற மனைகளில் கட்டிடம் கட்டி குடியிருப்போர் நகராட்சி / மாநகராட்சிகளால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, பாதாள சாக்கடை வசதி போன்றவற்றை மனைகளை முறைப்படுத்தாமல் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். இதனால் தனிமனைகள் முறைப்படுத்தப்படுவதன் வாயிலாக உள்ளாட்சிக்கு வரவேண்டிய கனிசமான வருவாய் ஈட்டப்படாமல் உள்ளது.

இந்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் துறை ரீதியான ஆய்வின் போது, உள்ளாட்சிகளின் நிதிநிலை திருப்திகரமாக இல்லாத நிலையில், உள்ளாட்சிக்கு நியாயமாக வரவேண்டிய வருவாயினை முனைப்புடன் அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளதால் இப்பொருள் குறித்து சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவாயினை ஈட்ட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

ஆகையால், அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல் திட்டத்தில் தனிக்கவனம் செலுத்தி மனைவரன்முறைப்படுத்த தெரிவிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு நகர் ஊரமைப்புத்துறையால் வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள அனுமதியற்ற தனிமனைகளை கண்டறிந்து அவற்றை முறைப்படுத்த சட்ட ரீதியாக நடவடிக்கைகளை துரிதப்படுத்த அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/– பா. பொன்னையா,
நகராட்சி நிர்வாக இயக்குநர்.

**நகல்**
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

03/08/2021
கண்காணிப்பாளர்.

03/08/21